# விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

01.

1.1 **இவ்விண்ணப்படிவம் கல்வியியற் கல்லூரி இறுதிப் பரீட்சை மதிப்பீட்டுப் பணியிலீடுபட்ட பரீட்சகர்களுக்கு அனுப்பப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கும் ஒவ்வொரு படிவம் அனுப்பப்படுகின்றது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் இம்மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட படிவத்தில் புதிதாக விண்ணப்பிக்க முடியும்.**

1.2 கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்று, தற்போது கல்வி அமைச்சுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

(அ) விண்ணப்பிக்கும் பாடத்தை உள்ளடக்கிய பட்டதாரியாக இருத்தல் அல்லது சாதாரண/ சிறப்புப் பயிற்சி/ கல்வியியற் கல்லூரி சான்றிதழ் பெற்றிருத்தலும் அதற்கேற்றதாக உரியமுறையில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தலும்.

(ஆ) கல்வியியற் கல்லூரிகளில் குறித்த பாடத்தைக் கற்பிப்பவர்கள்.

1.3 **இவ்விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது 14 ஆம் 15ஆம் பந்திகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவும். அப்பந்திகளை பூர்த்தி செய்யாதவர்களது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.**

1.4 ஒரு விண்ணப்பதாரி ஏதேனும் 04 பாடத்திற்கு இப்படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

**கவனிக்க : தாங்கள் ஆங்கில அல்லது சிங்கள மொழி ஊடகத்தில் விடைத்தாள் மதிப்பிட விரும்புவீர்களாயின் மொழிமூலத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள கூடுகளில் அது பற்றிக் குறிப்பிடவும்.**

1.5 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளன.

**மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவ உத்தேசித்துள்ள நகரங்கள்**

**01 - காலி 02 - பேராதெனிய 03 - களுத்துறை 04 - மிரீகம 05 - கொழும்பு**

**குறிப்பு : போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.**

1.6 இவ்விண்ணப்பப்படிவத்தைப் (17 ஆம் பந்தியைத் தவிர்ந்து) பூர்த்தி செய்தபின் நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும். நிறுவனத் தலைவர் அதனைச் சிபாரிசு செய்து விண்ணப்பதாரியிடம் கையளிக்காது தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**02. சான்றுப்படுத்தும் அலுவலர் :**

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி/ நிறுவனத் தலைவரினால் இப்படிவம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

**03. சான்றுப்படுத்தும் அலுவலருக்கான அறிவுறுத்தல்கள் :**

3.1 இப்படிவத்தில் விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா, என்பதைப் பரிசீலிக்கவும்.

3.2 தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாகச் சான்றுப்படுத்தல் வேண்டும்.

3.3 மேலே இல 17 (a) இல் (i) முதல் (iv) வரையான விண்ணப்பதாரி பற்றிய தங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்தவும்.

**A – சிறப்பானது B – நன்று C – சாதாரணம் D - திறமையின்மை**
**(கவனிக்க: W – பெறுபவர் விடைத்தாள் பரீட்சகர் நியமனத்திற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவார்.)**

3.4 விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு இவ்விண்ணப்பதாரியைத் தெரிவு செய்வது பொருத்தமானதா? இல்லையா? என்பதை இல 17 (b) இன் கீழும் விண்ணப்பதாரியால் தெரிவு செய்யப்பட்டுள்ள விபரங்களில் பிழையற்ற தன்மையை 17 (c) இன் கீழும் சான்றுப்படுத்தவும்.

3.5 இது அந்தரங்க அறிக்கையாகும். பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப் படிவங்களையும் சான்றுப்படுத்திய பின் பிரதியொன்றை வைத்துக்கொண்டு **2018 ஜனவரி மாதம் 30** ஆம் திகதிக்கு முன் அவற்றைப் பட்டியற்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“NDTF – 2017 (2018) தரவு மீளாய்வு படிவம்”** எனக் குறிப்பிடுக.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**மதிப்பீட்டு (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**த.பெ.இல - 1503,**
**கொழும்பு.**